## மெட்ரோ ரெயிலில் வேலை:

# திருநங்கைகளுக்கு ஓ.பி.எஸ். வாழ்த்து!

சென்னை, பிப். 16–

மெட்ரோ ரெயிலில் பணியமர்த்தப்பட்டுள்ள திருநங்கைகளுக்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:–

புதிதாக தொடங்கப்பட்ட புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள 13 திருநங்கை சகோதரிகளின் பணி சிறக்க எனது நல் வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்பெண் மட்டுமின்றி மூன்றாம் பாலினத்தவருக்கும் சமவேலை, சமஊதியம் கிடைக்கவேண்டும் என்பதே அம்மா அரசின் விருப்பம். மூன்றாம் பாலினத்தவர் மீதான தவறான பார்வையை மாற்றி சமுதாயத்தில் அவர்களுக்கு மரியாதையையும் அங்கீகாரத்தையும் பெற்றுத்தருவதில் அம்மாவின்அரசு என்றும் துணைநிற்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.